DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 237/2025

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | இளங்கோவன் |
| Father / Husband Name | லட்சுமணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 19.05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒரத்தி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.06.2025 ம் தேதி மதுராந்தகம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த விநாயகம் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.260/2025, பிரிவுகள் 296 பி, 115(2), 118(1), 351(3) BNS மற்றும் 4 of TNPHW Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.**(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சேகர் மற்றும் குப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.**(அந்த பார்வை மகசர் அசாஆ 6 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கயல்விழி என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 296 பி, 115(2), 118(1), 351(3) BNS மற்றும் 4 of TNPHW Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

**4.** இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததும், புலன் விசாரணை செய்ததும் நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கில் குற்றமுறையீட்டாளர் அளித்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். சம்பவம் 30.05.2024 அன்று நடந்தது. மறுநாள்

31.05.2024 அன்று 17.00 மணியளவில் புகார் வாக்குமூலம் பெற்றேன். புகார்தாரர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காவல் நிலையத்திற்கு எப்போது தகவல் வந்தது என்றால் 31.05.2024 அன்று மதியம் 12.00 மணிக்கு தகவல் வந்தது. சம்பவம் எதிரி வீட்டின் அருகிலேயோ புகார்தாரர் வீட்டின் அருகிலேயோ நடக்கவில்லை என்றால் வாதியின் வீட்டின் அருகே செப்டிக் டேங்க் பக்கத்தில் சண்டை நடந்தது. மாதிரி வரைபடத்தில் வாதியின் வீடோ, எதிரியின் வீடோ குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். விநாயகம்,கௌசல்யா மற்றும் மீனா ஆகியோர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

5. சேகர் மற்றும் குப்பன் ஆகியோர் வாதியின் மச்சான் மற்றும் சம்பந்தி என்றால் அவர்கள் அதே ஊர்காரர்கள். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சேகர் மற்றும் குப்பன் ஆகியோர் வாதியின் மச்சான் மற்றும் சம்பந்தி என்றாலும் சரியல்ல. 30ம் தேதி சம்பவம் நடந்தது. 31ம் தேதி வாக்குமூலம் பெற்று ஏன் அன்றே வழக்கு பதிவு செய்யாமல் 01.06.2024 அன்று வழக்கு பதிவு செய்தேன் என்றால் 31.05.2024 அன்று CCTNS கணினி பழுதாகி இருந்ததால் உடனடியாக வழக்கு பதிவு செய்யமுடியவில்லை. முதல் தகவல் அறிக்கை 04.06.2024 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை ஏன் காலத்தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் என்றால் வேறு பணி காரணமாக வெளியே சென்றுவிட்டேன்.

6. நான் இந்த வழக்கில் புலன் விசாரணை செய்ததில் வாதி மற்றும் எதிரிகளின் குடும்பத்திற்குள் ஏற்கெனவே முன்விரோதம் இருந்தது. அவர்களுக்குள் அடிக்கடி சண்டை வரும் என்பதும் தெரியவந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் வாதியின் உறவினர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட பொய்யான புகாரை பெற்று தவறாக வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சான்று பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.